05.02.2026 Mcop 45/2023 எ.ம.சா 1 முத்துக்குமார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை

டி.என்.76.ஏசி.6868 என்ற வாகனத்தை 1ம் எதிர்மனுதாரர் தான் ஒட்டி சென்றார் என்றால் சரிதான். விபத்தில் இறந்து போன ஆனந்தசெல்வி அந்த வாகனத்தில் ஒரு பயணியாக பயணம் செய்தார் என்றால் சரிதான். அந்த வாகனம் எங்களது நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த காப்பீடு முழுகாப்பீடு என்றால் சரிதான். முழுகாப்பீடு என்பது எல்லா வகையான தலைப்புகளையும் கட்டுப்படுத்தகூடியது என்றால் சரியல்ல. முழுகாப்பீடு என்பது எல்லா வகையான தலைப்புகளையும் கட்டுப்படுத்த கூடியது என்றும், வாகனத்தில் பயணம் செய்யும் நபர்களுக்கும், ஒட்டுனருக்கும் கட்டுப்படுத்தகூடியது என்றால் சரியல்ல. மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்ககூடாது என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர்கள் எங்கள் நிறுவனத்தை பொறுத்து 3ம் தரப்பினர்கள் என்றால் சரியல்ல. இறந்து போன ஆனந்தசெல்வி வாகனத்தை இயக்கவில்லை என்றால் சரிதான். முழு காப்பீட்டில் தனிநபர் காப்பீடும் உட்பட்டது என்றால் சரியல்ல. அது வாடிக்கையாளர்களின் விருப்பத்தை பொறுத்தது. இறந்து போன நபர் காப்பீட்டை பொறுத்தவரை 3ம் நபர் என்றும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்து போன நபர் வாகனத்தை இயக்காததால் மோட்டார் வாகன சட்டபிரிவு 166ன் படி மனு தாக்கல் செய்துள்ளதால் மனு நிலைக்கதக்கது என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ். முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.